**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**Case No.** **CC.No.48/2024**

Deposition of **LW–1/PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பொன்னையா | **Age** | : | 81/2026 |
| **Father Name** | : | வீரப்பன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | தம்மிநாயக்கன்பட்டி | **Calling** | : | பணி ஓய்வு |
| **Taluk** | : | உத்தமபாளையம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04/03/2026.**

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் தம்மிநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சுமார் மூன்று வருடத்திற்கு முன்பு நான் எனது மகன் வைத்து நடத்தும் மருந்து கடைக்கு காலையில் சென்று விட்டேன். எனது வீட்டிற்கு பக்கத்தில் இருந்தவர்கள் கடைக்கு வந்து எனது வீட்டின் கதவு பூட்டு உடைக்கப்பட்டு திறந்து இருப்பதாக என்னிடம் கூறினார்கள். நான் காலை 11 மணியளவில் வீட்டிற்கு சென்று பார்த்தேன். நான் வீட்டின் உள்ளே சென்று பீரோவை பார்த்த போது பீரோவில் வைத்து இருந்த 50 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் 3 கிராம் எடையுள்ள மோதிரமும் காணாமல் போய் இருந்தது. காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் நான் கொடுத்தது. **(புகார் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மோதிரத்தை யார் எடுத்துச் சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

**2)** அதன் பின்பு நீதிமன்றத்தில் மனுசெய்து மோதிரத்தை திரும்ப பெற்றுச் சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மோதிரம் தான் நான் இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்ற மோதிரம் ஆகும். **(மோதிரம் அடங்கிய புகைப்படம் எண்ணிக்கை 2 அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. புகார் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

3) நான் கையொப்பம் செய்த புகாரில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால், சரிதான். எதிரிகளை யார் என்று எனக்குத் தெரியாது என்றால், சரிதான். நான் அவர்களை பார்த்ததில்லை என்று சொன்னால், சரிதான்.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.03.04 18:35:05 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**